

கலைஞர் 100 1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 147 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மார்கழி 22 – செவ்வாய்க்கிழமை 06 ஜனவரி 2026 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 147 : Thiruvalluvar Year - 2056 - Margazhi 22 - Tuesday 06 January 2026 - Madurai 12 Pages ₹ 5.00


### பெண்களின் நலன் – பாலின சமத்துவம் உள்ளிட்ட வளர்ச்சியை வலுப்படுத்தும் வகையில்

# ஐ.நா. - தமிழ்நாடு அரசு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்!




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (5.1.2026) தலைமைச் செயலகத்தில், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை சார்பில் மாநிலத்தில் பெண்களின் நலன், பாலின சமத்துவம் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை நோக்கிய முயற்சிகளை மேலும் வலுப்படுத்தும் வகையில், ஐக்கிய நாடுகள் பெண்கள் அமைப்பிற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை செயலாளர் சஜ்ஜன்சிங் ரா. சவான், மாநில திட்டக் குழுவின் செயல் துணைத் தலைவர் பேராசிரியர் ஜெ.ஜெயரஞ்சன், ஐ.நா. பெண்கள் குழுவினர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் கையெழுத்தானது!

**சென்னை, ஜன. 6 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் மாநிலத்தில் பெண்களின் நலன், பாலின சமத்துவம் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை வலுப்படுத்தும் வகையில் ஐக்கிய நாடுகள் பெண்கள் அமைப்பிற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம்.**

**பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டிற்கான அமைப்பு (OECD), பொதுத்துறை கண்டுபிடிப்புகளின் கண்காணிப்பகம் (OPSI), ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (UNICEF - OoI) ஆகிய அமைப்புகளுடன் தமிழ்நாடு அரசின் மாநில திட்ட குழுவுக்கும் இடையேயான முத்தரப்பு ஒத்துழைப்பு மேற்கொள்ளப்பட்டது.**

இதுகுறித்த அரசின் செய்திக் குறிப்பு வருமாறு :-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (5.1.2026) தலைமைச் செயலகத்தில், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை சார்பில் மாநிலத்தில் பெண்களின் நலன், பாலின சமத்துவம் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை நோக்கிய முயற்சிகளை மேலும் வலுப்படுத்தும் வகையில், ஐக்கிய நாடுகள் பெண்கள் அமைப்பிற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. மேலும், பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டிற்கான அமைப்பு (OECD), பொதுத்துறை கண்டுபிடிப்புகளின் கண்காணிப்பகம் (OPSI), ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (UNICEF - OoI) ஆகிய அமைப்புகளுடன் தமிழ்நாடு அரசின் மாநில திட்ட குழுவுக்கும் இடையேயான முத்தரப்பு ஒத்துழைப்பு மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன் தமிழ்நாடு மாநிலக் குறிக்காட்டி வரையறை2.0வை வெளியிட்டு, மாநில திட்டக்குழுவால் தயாரிக்கப்பட்ட நான்கு ஆய்வறிக்கைகளையும் பெற்றுக் கொண்டார்.

**ஐ.நா. பெண்கள் அமைப்பிற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம்**

மாநிலத்தில் பெண்களின் நலன், பாலின சமத்துவம் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை நோக்கிய முயற்சிகளை மேலும் வலுப்படுத்தும் வகையில், ஐக்கிய நாடுகள் பெண்கள் அமைப்பிற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே (UN Women) தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

பெண்களின் மேம்பாடு மற்றும் நல்வாழ்வு ஆகியவை தமிழ்நாட்டின் வளர்ச்சி அணுகுமுறையின் மையமாகத் திகழ்கின்றன. பல ஆண்டுகளாக, மாநில அரசு பெண்களை மையமாகக் கொண்ட சமூக மேம்பாட்டிற்காக குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கும் பல்வேறு திட்டங்களையும், நிறுவன வழிமுறைகளையும் செயல்படுத்தி வருகிறது. சுய உதவிக் குழு இயக்கம், மகளிர் காவல் நிலையங்கள் நிறுவுதல், மகப்பேறு உதவித் திட்டங்கள், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, புதுமைப் பெண் திட்டம், விடியல் பயணம் போன்ற முதன்மைத் திட்டங்களில் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்கிறது.

பாலின சமத்துவத்தின் நோக்கங்கள் நீடித்த வளர்ச்சி இலக்குகளுடன் (SDGs) ஒன்றிணைந்தவை மற்றும் அனைத்து வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு பாலின சமத்துவம் எய்துவது இன்றியமையாதது ஆகும். பாலின சமத்துவமான சமுதாயத்தை மேம்படுத்துவதற்கும், பாலின சமத்துவ உணர்வுள்ள ஒரு கட்டமைப்பு மூலம் நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதில் ஐ.நா. பெண்கள் அமைப்பு உலகளவில் செயல்படுகிறது.

ஐ.நா. பெண்கள் அமைப்பு மற்றும் தமிழ்நாடு அரசின் திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையுடனான இப்புரிந்துணர்வு ஒப் பந்தமானது, பாலினப் பாகுபாடற்ற ஆளுகை மற்றும் திட்டமிடலுக்கான நிறுவனத் திறன்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

### தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்க அறிமுகம் செய்யப்பட்ட

## ஒரே நாளில் அலைபேசி, வலைதளம் வாயிலாக 14,318 கோரிக்கைகள் பரிந்துரை!

### பொதுமக்களிடையே மிகுந்த வரவேற்பு!

**சென்னை, ஜன. 6 -**

**தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்க அறிமுகம் செய்யப்பட்ட அலைபேசி எண், வலைதள விவரம், சமூக வலைதள தொடர்புகள், செயற்கை நுண்ணறிவு வலைவாசல் வழியாக ஒரே நாளில் 14,318 பேர் கோரிக்கைகள், பரிந்துரைகளை வழங்கியுள்ளனர். கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், வருகின்ற சட்டப்பேரவைத் தேர்தலுக்கான தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையைத் தயாரிக்கும் பொருட்டு, துணைப்பொதுச்செயலாளர் கனிமொழி எம்.பி. தலைமையில் 12 பேர் அடங்கிய தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுவை அமைத்தார்.**

இக்குழுவினர் பொதுமக்கள், வணிகர், விவசாயிகள், இளைஞர், பெண்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பு மக்களையும் நேரடியாக சந்தித்து பரிந்துரைகளை பெரும் பொருட்டு தமிழ்நாடு முழுக்க பயணம் மேற்கொள்ள உள்ளனர். இதன் ஒரு பகுதியாக பொதுமக்களின் கருத்துக்களையும் பரிந்துரைகளையும் பெறும் வகையிலான அலைபேசி எண், வலைதள விவரம், சமூக வலைதள தொடர்புகள், செயற்கை நுண்ணறிவு




வலைவாசல் (போர்டல்) ஆகியவற்றை கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிமுகம் செய்து வைத்தார்.

இதற்காக 08069446900 என்ற தொலைபேசி எண்ணில் ஆலோசனை தெரிவிக்கலாம். மேலும் வாட்ஸ்அப் எண் 9384001724, மின்னஞ்சல் dmkmanifesto2026@dmk.in, இணையதளம்http://www.dmk.in/ta/manifesto2026, சமூக வலைத்தளங்கள்: dmkmanifesto26, செயற்கை நுண்ணறிவுத் தளம்: tnmanifesto.ai என்ற தளங்களின் மூலம் கருத்துக்களையும் பரிந்துரைகளையும் தி.மு.க.விற்கு வழங்கலாம் என்று அறிவிக்கப்பட்டது.

2026 தி.மு.க. தேர்தல் அறிக்கைக்காக பொதுமக்களின் கருத்துக்களையும் பரிந்துரைகளையும் பெறும் வகையிலான அலைபேசி எண், வலைதள விவரம், சமூக வலைதள தொடர்புகள், செயற்கை நுண்ணறிவு வலைவாசல் அறிமுகம் செய்யப்பட்டதோடு நில்லாமல் மாநிலம் முழுக்கவும் கருத்துகளையும் பரிந்துரைகளையும் வரவேற்று தமிழகம் முழுவதும் தி.மு.க. சார்பில் போஸ்டர்கள் ஒட்டப்பட்டுள்ளன.

அறிமுகம் செய்யப்பட்ட முதல் நாளில் தொலைபேசி வழியாக 1,188, வாட்ஸ் அப் வழியாக 7,527, மின்னஞ்சல் வழியாக 251, சமூக வலைதளங்களான இணையதளம் வழியாக 2015, கியூ ஆர் ஸ்கேன் வழியாக 692, ஏஐ வலைவாசல் வழியாக 2645 பேர் என மொத்தம் 14,318 கோரிக்கைகளும், பரிந்துரைகளும் பெறப்பட்டுள்ளன. தி.மு.க.வின் இந்த புதிய முறை பொதுமக்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது.

### கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு முன்னிலை! கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமை!

# ஜன.26 - தி.மு.க. டெல்டா மண்டல மகளிர் அணி மாநாடு!

## கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புரை! தலைமைக் கழகம் அறிவிப்பு!

**சென்னை, ஜன. 6 -**

**தேதி மாற்றத்துடன் 26.01.2026 திங்கட்கிழமை அன்று தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டியில் முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றிட கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு முன்னிலையில் கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., அவர்கள் தலைமையில் “வெல்லும் தமிழ்ப் பெண்கள்” தி.மு.க. டெல்டா மண்டல மகளிர் அணி மாநாடு நடைபெறுகிறது என தலைமைக் கழகம் அறிவித்துள்ளது.**

இதுகுறித்து தலைமைக் கழகம் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு :-

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் மகளிர் மேம்ப்பாட்டுக்கென தொடர்ச்சியான திட்டங்களை வகுத்து, 1.31 கோடி மகளிருக்கு ‘கலைஞர் மகளிர் உரிமைத் தொகை’, ‘விடியல் கட்டணமில்லா பேருந்துப் பயணம்’, கல்வி கற்கும் மாணவிகளுக்கு ‘புதுமைப் பெண் திட்டம்’, வேலைக்குச் செல்லும் மகளிருக்கு பாதுகாப்பான ‘தோழி விடுதி’, இந்தியாவிலேயே அதிக அளவாக 43 சதவீதம் வேலைக்குப் போகும் பெண்களைக் கொண்ட மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்வதற்கான சூழல் என மகளிர் மேம்பாட்டுக்காக தொடர்ச்சியான திட்டங்களை வகுத்து வரும் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் தலைமையில், கடந்த 29.12.2025 அன்று திருப்பூர் மாவட்டம், பல்லடத்தில், “பார் சிறுத்ததோ, படை பெருத்ததோ” என்று சொல்லத்தக்க வகையில், “வெல்லும் தமிழ்ப் பெண்கள்” தி.மு.க. மேற்கு மண்டல மகளிர் அணி மாநாடு கறுப்பு சிகப்பு மகளிர் அணி படையின் மாபெரும் எழுச்சியோடு வெற்றிகரமாக நடைபெற்றதைத் தொடர்ந்து;

முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றிட - கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு அவர்கள் முன்னிலையில், கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., அவர்கள் தலைமையில்;

கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி., துணைப் பொதுச்செயலாளர்கள் ஐ.பெரியசாமி, முனைவர் க.பொன்முடி, திருச்சி சிவா, எம்.பி., ஆ.இராசா, எம்.பி., அந்தியூர் ப.செல்வராஜ், எம்.பி., மு.பெ.சாமிநாதன், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கழக மகளிர் அணித் தலைவர் விஜயா தாயன்பன், மகளிர் அணிச் செயலாளர் திருமதி ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ப.இராணி ஆகியோர் பங்கேற்பில்;

வருகிற ஜனவரி 19 அன்று நடைபெறும் என்று அறிவிக்கப்பட்ட தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டியில் “வெல்லும் தமிழ்ப் பெண்கள்” தி.மு.க. டெல்டா மண்டல மகளிர் அணி மாநாடு 26.01.2026 திங்கட்கிழமை அன்று மாலை 4.00 மணி அளவில் நடைபெறும்.

மாவட்டக் கழகச் செயலாளர்/பொறுப்பாளர்களான எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், எஸ்.எஸ்.சிவசங்கர், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, எஸ்.ரகுபதி, சி.வி.கணேசன், பூண்டி கே.கலைவாணன், எம்.எல்.ஏ., காடுவெட்டி தியாகராஜன் எம்.எல்.ஏ., க.வைரமணி, க.அன்பழகன் எம்.எல்.ஏ., வீ.ஜெகதீசன், நிவேதா முருகன் எம்.எல்.ஏ., கே.கே.செல்லபாண்டியன், என்.கௌதமன், டி.பழனிவேல் அமைச்சர் பெருமக்களான கோவி.செழியன், சிவ வீ. மெய்யநாதன், டி.ஆர்.பி.ராஜா - நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.கல்யாணசுந்தரம், அருண்நேரு எம்.பி., முரசொலி எம்.பி., மற்றும் சட்ட மன்ற உறுப்பினர்கள் ஆகியோர் இம்மாநாட்டினை ஒருங்கிணைத்து ஏற்பாடு செய்வார்கள்.

நிறைவாக, தஞ்சாவூர் மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன், எம்.எல்.ஏ., அவர்கள் நன்றியுரையாற்றுகிறார்.

இவ்வாறு தலைமைக் கழகம் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.